Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 40/2017

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | சீனிவாசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1972 of the day of 31.10.2022

முதல் விசாரணை

நான் சின்னப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சர் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.010.2016 ம் தேதியில் நான் திருச்சி சமயபுரம் கோவிலுக்கு கடையை பூட்டிவிட்டு போயிருந்தேன். 04.10.2016 ம் தேதியில் மதியம் நான் என் கடைக்கு வந்து பார்த்தபோது என் கடையிலிருந்த 7 லாரி டயர்களையும், 20 டியூப்களையும் காணவில்லை. நான் பக்கத்தில் இருப்பவர்களை விசாரித்தேன்.

S/d. K.Ambiga

சீனிவாசன் நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

பக்கத்தில் இருந்தவர்கள் பிவிஜி லாரி மேனேஜர் நான் கடையை காலி செய்வதாக சொல்லி ஒருவர் டயரை ஆம்னி வேனில் 03.10.2016 ம் தேதியில் ஏற்றி சென்றதாக சொன்னார். இதுசம்மந்தமாக நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் அளித்து தான்.அந்த புகார் அசாஆ 1. பின் ஒரு வாரம் கழித்து பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் இருந்து என் டயர் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் டயர்களை அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரி தான் சலீம் தான் டயர்களை திருடியதாக காவல்நிலையத்தில் சொன்னார்கள். பின்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த டயர்களை நான் மனு செய்து புகைப்படம் எடுத்துக்கொடுத்து சென்றேன். தற்போது காட்டப்படும் புகைப்படத்திலுள்ள டயர்கள் மற்றும் டியூப்கள் என் கடையில் திருடுபோனது தான்.அதை நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்றேன். அந்த புகைப்படத்திலுள்ள 7 டயர்கள் சாபொ.1. (புகைப்படம் 4 எண்ணிக்கை). 20 டியூப்கள் சாபொ.2.(புகைப்படம் 4 எண்ணிக்கை). போலீசார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d. K.Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.